**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**<u>STC.NO-254/2023</u>**

**Dated :27.01.2026**

**Deposition of witness for : P.W.2**

**List of Witness LW2 Examined as PW2 (Eye Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காமராஜ் | வயது | : | 45 |
| தந்தை பெயர் | : | பிச்சன் காளி | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | வளவம்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**

**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்)

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த சுமார் 2 வருடங்களுக்கு முன்பு 23 ஆம் தேதி, இரவு 07.00 மணியளவில், எனது இருசக்கர வாகனத்தில், வேலைக்கு செல்வதற்காக ஆதனக்கோட்டை செல்வதற்கு தஞ்சாவூர்- புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்தேன். ஆதனக்கோட்டை சரணி பள்ளி அருகே, இருசக்கர வாகனத்தில் வந்த லெட்சுமி நாராயணன் என்பவர் காலில் அடிபட்டு, கீழே விழுந்து கிடந்தார். மற்றொரு இருசக்கர வாகனம், அவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக தெரிந்து கொண்டேன். அதன்பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலமாக காயம்பட்டு கிடந்த அவரை, சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்து சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எந்த இருசக்கர வாகனம் மோதி விபத்தை ஏற்படுத்தியது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சம்பவத்திற்கு பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என**

ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்.நா.சிவபழனி,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.